கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

**GEO/S 3102 உயிர்ப்புவியியல்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

யாதாயினும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்

---

01.(அ) உயிர்ப்புவியியல் (Bio Geography) என்பதனை வரைவிலக்கணப் படுத்துக.

(05 புள்ளிகள்)

(ஆ) புவியியலின் ஒரு பிரிவாகக் கருதப்படும் உயிர்ப்புவியியல் கற்கையின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) உயிர்ப்புவியியல் கற்கையின் நோக்கங்களைக் குறிப்பிட்டு இன் நோக்கங்கள் எவ்வகையில் ஒரு இயற்தொகுதி தொடர்பான முழுமையான அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அமைகின்றன என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

02.(அ) இயற்கைத் தொகுதிகள் என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) காட்டுச் சூழல் தொகுதியொன்றின் பிரதான கூறுகளை எடுத்துக் காட்டுக.

(08 புள்ளிகள்)

(இ) தாவரங்களுக்கும் விலங்குகளுக்குமிடையேயான தொடர்புகள் எவ்வகையில் ஒரு இயற்கைத்தொகுதியின் முறையான செயற்பாட்டை விளக்கிக்கொள்வதற்கு ஆதாரமாக அமைகின்றது என்பதனை உதாரணங்கள் கொண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

03.(அ) உயிர்ப்புவியிரசாயன வட்டம் என்றால் என்ன?

(05 புள்ளிகள்)

(ஆ) யாதாயினும் மூன்று உயிர்ப்புவியிரசாயன வட்டங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றின் வட்ட ஒழுங்கிலான செயற்பாடுகள் குறித்து விளக்குக.

(20 புள்ளிகள்)

04.(அ) மண்ணில் காணப்படும் முக்கிய கூறுகள் எவையெனக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

(ஆ) வானிலையாலழிதல் (weathering) செயன்முறை மண்ணுருவாக்கத்திற்கு எவ்வழிகளில் பங்காற்றுகின்றது என விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) ஹன்ஸ் ஜெனி (Hans Jenny) என்பவரினால் முன்வைக்கப்பட்டுள்ள மண்ணுருவாக்கக் காரணிகள் பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

05.(அ) உயிர்ப்பல்வகைமை (Bio Diversity) என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் உயிர்ப்பல்வகைமைத்தன்மை சிறப்பாக காணப் படுகின்றதென்ற சர்வதேச மட்டத்திலான கருத்தை நியாயப்படுத்த நீர் முன்வைக்கும் கருத்துக்களை யாதாயினும் ஒரு சூழல் தொகுதியை முன்னுதாரணமாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

06. உலக மரபுரிமை தளமாக கருதப்படும் "சிங்கராஜ வனத்தின் உயிர்ப் பல்வகைமைத் தன்மை" என்ற தலைப்பில் ஓர் கட்டுரை வரைக.

(25 புள்ளிகள்)